# பேச்சுக்கலையியல்

ஒரு மனிதன் வெற்றியாளராக மாற நிறைய பண்புகள் தேவைப்படுகின்றன. மனிதனுடைய நற்பண்புகளே அவனை வெற்றியாளராக உருவாக்குகிறது. வெற்றியாளராக வேண்டுமென்றால் நல்ல பேச்சுத்திறமை இருக்க வேண்டும்.

பேச்சு என்பது ஒரு கலையாகும். இது நூல்கள் பல கற்பவர்களுக்கே அரிய பொக்கிஷமாக அமைகிறது.
மேடைப்பேச்சில் நல்ல தமிழைக் கொண்டு மக்களை தன்பால் ஈர்த்தவர்கள் தமிழ்தென்றல் திரு. வி. க. பேரறிஞர் அண்ணா, வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார், ரா. பி.
சேது பிள்ளை உள்ளிட்டோரை குறிப்பிடலாம் ‘சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்’ என்பார்கள். ஒரு வாசகம் ஆயினும் திருவாசகமாய் பேச வேண்டும்.
எதைக் கொட்டினாலும் அள்ளி விடலாம். ஆனால் வார்த்தையைக் கொட்டினால் அள்ள முடியாது.
உலகிலேயே பயங்கரமான ஆயுதம் நாக்குதான். இதனால் தான் நம்முடைய நாக்கை 32 பற்கள் அரண்போல் அமைந்து 24 மணிநேரமும் காவல் காக்கின்றன.
ஒரு பிரச்னைக்கு காரணமாக இருப்பது பேச்சே. அதே பிரச்னைக்கு தீர்வு காணப்படுவதும் பேச்சு மூலமே.எத்தனையோ பிரச்னைகள் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்த்து வைக்கப்படுகின்றன. ஒருவரது கனிவான பேச்சு பகைவரை கூட நட்பு பாராட்ட வைக்கும்.
பேச்சுத் திறமையினாலே சிகரத்தை தொட்ட நிறைய சாதனையாளர்கள் உள்ளனர். பேச்சில் சாதாரண பேச்சு, மேடை பேச்சு என இருவகை உண்டு.
கடைத்தெருவில் 5 இளைஞர்கள் கூடினால் ஒருவரை வாய் கிழிய பேசி கேலி, கிண்டல் செய்து கலாய்ப்பது உண்டு. அதே இளைஞர்களை மேடையில் ஏற்றி மைக்கை கொடுத்து நாலு வார்த்தை பேச சொன்னால் கை, கால்கள் எல்லாம் மிருதங்கம் வாசிப்பது போன்று நடுங்கும்.எனவே வெறும் பேச்சுக்கும், மேடைப்பேச்சுக்கும் நிறைய வேறுபாடு உண்டு. பக்கம்பக்கமாக எழுதி உணர்த்துவதை காட்டிலும் எளியமுறையில் உணர்த்துவதே பேச்சாகும்.

பேச்சும்,மொழியும்

மேடைப் பேச்சுக்கு கருத்துகளே உயிர்நாடி என்றாலும் கருத்துகளவெளிப்படுத்த மொழி இன்றியமையா இடம் பிடிக்கிறது.நாம் பேசும் பேச்சு வெற்றி பெற வேண்டும் என்றால் வலிமையான கருத்து இருத்தல் வேண்டும். பேச்சாளரின் கருத்து கேட்பவர்களின் நெஞ்சங்களில் தேன் போன்று பாய்தல் வேண்டும்.

மின்சாரம் செல்ல கம்பி கருவியாக இருப்பது போல கருத்தை விளக்க மொழி கருவியாக உள்ளது. பேசும் பொருளை ஒழுங்குமுறை படுத்தி தொடக்கம், கருத்துரை, முடிவு என பகுத்து பேசுவதையே பேச்சுமுறை என்கிறோம்.
இதனை எடுத்தல், தொடுத்தல், முடித்தல் என்று கூறலாம்.

**எடுத்தல்**

பேச்சை தொடங்குவது எடுத்தல். பேச்சின் தொடக்கம் நன்றாக இருக்காவிட்டால் கேட்பவர்களுக்கு பேச்சு குறித்த நல்லெண்ணம் தோன்றாது. தடங்கலின்றி பேச தொடங்குவதே நல்ல அடித்தளமாகும்.
மண்ணில் ஈரப்பதம் இருந்தால்தான் விதைக்க முடியும் என்பது போல் கேட்பவர்களை தன்வயப்படுத்தும் கருத்து இருந்தால்தான் பேசி ஜெயிக்க முடியும்.

**தொடுத்தல்**

தொடக்கவுரைக்கு பிறகு பொருளை விவரித்து பேசும் முறை தொடுத்தல். நறுமணம் கொண்ட மலர்களை நாரில் தொடுப்பது போன்று நாம் சொல்ல வேண்டிய கருத்தை சுருக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துரைக்க வேண்டும்.
சிலர் பேசும் போது, என்ன தலைப்பில் பேச வந்தோம் என்பதையே மறந்து வளவளவென பேசி கொண்டிருப்பர். பேச்சு நன்றாக இருக்காவிட்டால் ஒவ்வொருவராக எழுந்து சென்று விடுவர்.
கடைசியில் நமது பேச்சை கேட்க இருக்கைகள் மட்டுமே இருக்கும். பேச்சு பார்வையாளர்களை கவரவில்லையென்றால் அடிக்கடி கைதட்டியே பேச்சாளரை பேச விடாமல் திருப்பி அனுப்பி விடுவர்.
சிறந்த பேச்சாளர் ஒருவர் பேச மைக்கை பிடித்தால் போதும். விசில் அடித்து, கரவொலி எழுப்பி வரவேற்பர்.

ஒரு பேச்சாளர் மேடையில் வெகுநேரம் வன்முறையை பற்றி விரிவாக பேசினார். பேசி முடித்தவுடன் அவர் பார்வையாளர்களை பார்த்து ‘நான் பேசிய கருத்துகளில் எந்த கருத்து உங்களுக்கு பிடித்தது’ என்று கேட்டார்.
உடனே ஒரு குறும்புக்கார பார்வையாளர் சட்டென்று எழுந்து, ‘ஐயா. . . ! நீங்கள் நிறைவாக கூறிய நன்றி. . . ! வணக்கம். . . ! என்ற கருத்தே எனக்கு மிகவும் பிடித்தது’ என்றார்.

**முடித்தல்**

பேச்சின் கருத்தை சுருக்க கூறி முடித்தல், உணர்ச்சியை தூண்டும் வகையில் கூறி முடித்தல், பாராட்டி முடித்தல், பொருத்தமான கவிதை கூறி முடித்தல் என முடிக்கும் முறைகள் பல உள்ளன. சிறந்த பேச்சாளர் எப்படி முடித்தாலும் அது அழகாகவே இருக்கும்.
தமிழறிஞர்களால் தமிழகத்தில் இன்றும் பேச்சுக்கலை சிறப்புற்று விளங்குகிறது என்பதில் யாருக்கும் எள்ளளவும் ஐயமில்லை. பேச்சாளராக ஆசையா.

மனிதனை மனிதனாக்கிய அருங்கலைகளில் ஒன்று 'சொல்லாடல்' என்ற பேச்சாற்றல். பேசுபவரை 'சொற்செல்வர்' என்றும், கேட்கின்றவரை 'செவிச்செல்வர்' என்றும் தமிழ் மரபு பேசுகிறது. மனிதர்களின் எல்லா பேச்சும் பேச்சாவதில்லை. மழலை பேச்சும், கிளிப்பேச்சும் போல மகிழ்வு தருவதும் இல்லை.
**"ஆர்த்தசபை நூற்றொருவர்; ஆயிரத்து ஒன்றாம் புலவர்வார்த்தை பதினாயிரத்து ஒருவர்"** - என்பார் அவ்வையார்.உயர்ந்த சபைகளில் அமரும் தகுதி நூறு பேரில் ஒருவருக்கு வாய்க்கும். ஆயிரம் பேரில் ஒருவரே கவிஞராய் திகழ்வர். ஆனால், பேச்சாளராக இருப்பவர் பதினாயிரம் பேரில் ஒருவரே என்பது அவ்வையாரின் கருத்து.

**மேடைப்பேச்சு**

பேச்சு என்பது உரையாடல் தவிர்த்த உயர்ந்த நோக்கோடு கூடிய ஒரு அரிய கலை. இதனை மேடைப் பேச்சு என்கிறோம். மேடையில் பேசுவது ஒரு கலை. அவையிலே பேசுவது மனித உறவுகளை மேம்படுத்தும் ஒரு வினைப்பாடாகும். அது வெறும் சொற்களின் கூட்டு அல்ல. பரந்த மனமும், விரிந்த வாசிப்பும் நல்ல பேச்சாளனுக்கு உரிய அடிப்படை தகுதி. 'அவையறிதல்' என்பது நல்ல பேச்சாளனுக்கு உரிய கண்ணியமாகும். மேடை பேச்சு ஆரவாரமான ஒரு வணிக செயல் அல்ல. முன்னர் பலகாலும் நெஞ்சில் விழுந்த சிந்தனை வித்துக்களின் வெளிப்பாடு."சொல் திறன் மிக்கவனை வெல்வது அரிது" என்பார் வள்ளுவர். மேடையில் பேசுபவர் பொதுமக்கள் ஏற்று கொள்ளும் வகையில் பேசாவிட்டால்,

பொதுமக்கள் வெறுப்படைந்து எழுந்து சென்று விடுவார்கள். கேட்கின்றவர்களுக்கு ஏற்ப மொழிவதுதான் பேசும் திறன். பிறரை காயப்படுத்தாமல் பேசுவது அரிய கலை. நல்லதை கேட்டவன் நல் வழியில் நடப்பான். இடைவிடாத முயற்சி, விடாத வாசிப்பு கற்றறிந்தோர் தொடர்பு ஆகியவை எப்போதும் சிந்தையில் இருந்தால் பேச்சாளராகலாம். வெற்றியும் பெறலாம். இலக்கிய சொற்பொழிவாளருக்கு மனப்பாட பயிற்சியும், நல்ல உச்சரிப்பும் தேவை. நல்ல பேச்சாளர்களை பார்த்து நாமும் அவர்களை போல் பேச வேண்டும் என்ற வைராக்கியத்தை பதிவு செய்து கொள்ள வேண்டும். பேசத் தெரியாமல் திணறுகிறவர்களை பார்த்து, நாம் இவர் போல் மேடையில் அரைகுறையாக பேசக்கூடாது என்று உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**மேடைஅச்சம்**

ஆழமான கல்வியே மேடை அச்சத்தை போக்கும். உணர்ச்சி மிக்க சொற்களால், நகைச்சுவையுடன் பேசினால் கேட்பவர் கவனத்தை ஈர்த்து விடும். பேச்சாளனின் வார்த்தைக்கும், அவனின் வாழ்க்கைக்கும் வித்யாசம் இல்லாவிட்டால், பேச்சாளனிடமிருந்து வெளிப்படும் கருத்துக்களை மக்கள் மறுக்காமல் ஏற்பர். குறித்த நேரம், நல்ல தொடக்கம், நல்ல முடித்தல் ஆகியவை நடுவர்களாலும், பார்வையாளர்களாலும் பெரிதும் விரும்பப்படும். கூட்டத்தினரின் மனநிலை, நேரத்தின் அருமை இவற்றை கருத்தில் கொள்ள வேண்டும். குறிப்புகளை வைத்து பேச வேண்டுமே தவிர பெரிய புத்தகங்களை எடுத்து சென்று, மேடையில் புரட்டி பார்த்து பேச கூடாது.

**பேச்சில்புதுமை**

பேச்சுலகில் புதுமையை கையாண்டவர்களே புதிய வரலாறு படைக்கின்றனர். நல்ல பேச்சு நடை மக்களிடத்தில் சென்று சேர்ந்து, அவர்களையும் நம்முடன் சேர்ந்து சிந்திக்க தூண்டும். கருத்தரங்கம் மற்றும் விவாத மேடைகளில் பேசும்போது, எதிரில் இருந்து பேசுபவர்களின் கருத்தை நன்கு உள்வாங்கி கொண்டு, அதற்கு தக்க மறு மொழி பகிர்தலே சிறப்பாக அமையும். மேடையில் அமங்கலமான அச்சம் தரும் சொற்களை தவிர்த்து, இனிய மங்கல சொற்களை பேச வேண்டும். நகைச்சுவை என்ற பெயரில் கொச்சையான சொற்கள், இரட்டை பொருள் தரும் சொற்களை பேச கூடாது. கேட்போர் நேரில் காட்சிகளை பார்ப்பது போல், வருணனையாளர்கள் செய்திகளை உவமை நயத்துடன் கூற வேண்டும். கதைகள் வாயிலாக கூறும் செய்திகள் மக்களின் கருத்தை கவரும். தளர்ந்து கிடக்கின்ற உள்ளங்களை, சக்தி மிக்க பேச்சாளரின் பேச்சு நிமிர்ந்து நிற்க செய்யும்.

**பேச்சாளர்களின்பெருமை**

திரு.வி.க.,வின் மேடை பேச்சு, எழுதப்பட்ட வாக்கியம்போல் எளிமையாகவும், இனிமையாகவும் இருக்கும். மறைமலை அடிகள், ரா.பி.சேதுபிள்ளை போன்ற தமிழ் அறிஞர்கள் மேடையில் முழங்குவர். ஈ.வே.ரா.பெரியார் மேடை பேச்சு பாமரனும் புரிந்து கொள்ளும் வகையிலானது. அண்ணாத்துரை, ஈ.வி.கே.சம்பத், நெடுஞ்செழியன், கருணாநிதி போன்ற திராவிட இயக்க பேச்சாளர்கள் பேச்சின் வலிமையால் ஆட்சி கட்டிலை அடைய முடியும் என்று நிரூபித்தவர்கள்.ஜீவா, பாலதண்டாயுதம், ஜெயகாந்தன் போன்ற பொது உடைமை கட்சியினர் தங்களுக்கென ஒரு பேச்சு பாணியை வகுத்து மக்கள் மனதில் இடம் பிடித்தவர்கள். குன்றக்குடி அடிகள், கி.ஆ.பெ.விசுவநாதன், கி.வா.ஜெகநாதன், திருமுருக கிருபானந்த வாரியார், திருக்குறள் முனுசாமி, திருச்சி ராதாகிருஷ்ணன், புலவர் கீரன், சாலமன் பாப்பையா, சத்திய சீலன் போன்றோர் இலக்கிய உலகிலும் பட்டிமன்ற வரலாற்றிலும் தங்களுடைய பேச்சால் தனித்தடம் பதித்தவர்கள். சக்தி பெருமாள், சரஸ்வதி ராமனாதன், இளம்பிறை மணிமாறன் போன்ற பெண் பேச்சாளர்களும் பேச்சால் பெருமை பெற முடியும் எனநிரூபித்தவர்கள்.

**பேச்சாளனின்தகுதி**

மேடை பேச்சில் வல்லவராக திகழ நல்ல தமிழ் கற்க வேண்டும். மொழி நடை, தெளிவான உச்சரிப்பு, உணர்ச்சி பொங்க பேசுதல், கருத்திலே தெளிவு, குரலில் ஏற்ற, இறக்கம், இலக்கிய எடுத்துக்காட்டுகள், உடல் மெய்ப்பாடு என பயிற்சி எடுத்து கொண்டால் சிறந்த பேச்சாளராக திகழலாம்.**"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லைவெல்லும் சொல்இன்மை அறிந்து"-** என்பார் வள்ளுவர்.ஒரு மேடையில் புகழ்மிக்க பேச்சாளர்கள் பலர் இருக்கலாம். ஆனால், அத்தனை பேரின் பேச்சிலும் ஒருவர் அல்லது இருவர் பேச்சு தான் மக்களை ஈர்க்கும். சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த சுவாமி விவேகானந்தர், சர்வசமய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சிகாகோ சென்றார். அங்கு பேசிய ஒவ்வொரு மத தலைவர்களும் "சீமான்களே, சீமாட்டிகளே" என பேசியபோது, விவேகானந்தர் மட்டுமே, "சகோதர்களே, சகோதரிகளே" என்ற இரண்டு சொற்களை சொன்னவுடன், அந்த சொல்லில் ஈர்க்கப்பட்ட மக்கள், எழுந்து நின்று கைதட்டி அவரது பேச்சை பாராட்டி ஆர்வத்தோடு கேட்டனர்.**"கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்வேட்ப மொழிவதாம் சொல்"- (குறள்)**கேட்டு கொண்டிருப்பவர்களை தன் பேச்சாற்றலால் கட்டி போட்டு,

பகைவரும் கேட்க விரும்பும் பேச்சே சிறந்த பேச்சு என்பார் வள்ளுவர்."**மெய்யுடை ஒருவன் சொல மாட்டாமையால்பொய் போலுமே பொய்போலுமேபொய்யுடை ஒருவன் சொல்வன்மையாலேமெய் போலுமே மெய் போலுமே**"நேர்மையான ஒருவன் உண்மையான செய்தியை மேடையிலோ, எதிரில் இருப்பவர்களிடமோ எடுத்து சொல்ல இயலாதவனாக இருப்பானேயானால் அப்போது உண்மையும் பொய்யாகும். இதற்கு மாறாக பொய்மை குணமுடைய ஒருவன், பொய்யான செய்தியை தன் ஆற்றல் மிக்க பேச்சால் எடுத்துரைப்பானேயானால் பொய்யும் மெய்யாகும். அப்பொய்மையாளனும் போற்றப்படுவான். ஒரு நல்ல சொற்பொழிவு நூறு புத்தகங்கள் படித்ததற்கு ஈடாகும். தமிழ்நாட்டில் சொற்பொழிவு என்பது சமயத்தில் தொடங்கி, நாடகத்தில் இயங்கி அரசியலில் துலங்கி, இன்று பெரும்பாலும் இந்த மூன்றையும் உள்வாங்கிய வடிவமாக திகழ்கிறது.

**ஈர்க்கும்பேச்சு**

இனிமையான பேச்சு எதிராளியை தன்பால் ஈர்க்கும். நகைச்சுவையான நல்ல பேச்சு சிரிக்கவும், சிந்திக்கவும் தூண்டும். கற்பதை விடவும், கேட்டறிதல் நன்று என்ற உண்மையை பேச்சாளன் உணர்ந்து பேச வேண்டும். ஜனநாயக நாட்டில் பேச்சே ஆயுதம். நல்ல பேச்சாளனே சமுதாயத்தில் மதிக்கப்படுகின்றான். அவனே தலைவனாகவும் ஆகிறான். எனவே, பேச்சு என்னும் ஆயுதத்தின் வலிமையை உணர்ந்து அதனை பயன்படுத்தி வெற்றி காண வேண்டிய சூழ்நிலையில் நாம் வாழ்ந்து வருகிறோம்.

பொதுவாக உயிர்களை இரண்டு வகையாகப் பிரிக்கிறார்கள். ஒன்று உயர்திணை மற்றொன்று அ்றிணை.

உயர்திணை அ்றிணை என்ற இரு பகுதியின் பாகுபாடு யாது? வாய்திறந்து பேசுகிற உயிர்கள் உயர்திணை. வாய் பேச இயலாதவை அ்றிணை.
வாய் திறந்து பேசுகிற ஆற்றலை மனிதன் பெற்றதால்தான் அவன் உயர்திணை.

மனிதனை உயர்திணையாக்கிய இப்பேச்சை (சொல்லை) நாம் எப்படிப் பயன் படுத்துகிறோம் எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

பேசுவதெல்லாம் பேச்சல்ல. அது ஓர்கலை. சொல்லைப் பொதுவாக நாம் செல்வம்

போல்தான் பார்க்கிறோம். ஆகையால்தான் சொல்வல்லாரைச் சொல்லின் செல்வர்என்கிறோம்.

சொல்லுக்குள்ள ஆற்றல் வில்லுக்கும் கிடையாது. ஆகையால் தான் வள்ளுவர்:-

“வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை”- என்கிறார்.

காற்றினும் கடிய வேகமுடையது சொல். ஆகையால்தான் கம்பர்:-
“சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம்” என்கிறார்.

மணிக்கணக்காய்ப் பெசிக்கொண்டிருப்பது பேச்சல்ல. ஆகையால்தான் நன்னூலார் “சுருங்கச் சொல்” என்கிறார்.

சொல் வல்லாரால் சாதிக்க முடியாத தொன்றில்லை. அடக்குமுறையால் சாதிக்க முடியாததையும் அன்பான சொல்லால் சாதித்து விடலாம். ஆகையால்தான் அவ்வை:-

“வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது -நெட்டிரும்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்” -என்கிறார்.

என்னலத்திலும் உயர்ந்தது சொன்னலம். இச்சொன்னலம் பன்னலமும் பயக்கும்.ஆகையால்தான் வள்ளுவர் சொல்வன்மை என்னும் அதிகாரத்தில் சொன்னலத்தை முதலில் வைக்கிறார்.

“நாநலம் என்னும் நலமுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று” என்கிறார்.

பயிருக்கு முள் வேலி. உயிருக்கு உண்மை வேலி. சொல் உண்மையுடைத்தாக இருக்கவேண்டும். கொடுத்த வாக்கை உண்மையாகக் காப்பாற்றியதால் உயிரை

இழந்தான் தயரதன். உண்மையாய் அச்சொல்லைக் காப்பாற்றியதால் தான் இன்றும் அவன் புகழ்நிற்கிறது. காணா முடியைக் கண்டேன் என்ற பிரம்மனுக்கு ஆலயம் இல்லாத குறை ஏற்பட்டது.

எத்தனைதான் உண்மை பேசினும் அப்பேச்சு நன்மை பயக்கவேண்டும். நன்மையில்லா உண்மையால் (பொய்யைப் போல்) எப்பயனும் இல்லை.

ஒருவன் இன்னொருவன் மீது கடுஞ்சினங்கொண்டு அரிவாளால் வெட்டவருகிறான். வெட்டுப்பட விருப்பவன் நம்வீட்டில் வந்து ஒளிந்து கொள்கிறான். சினங்கொண்டவன் வந்து நம்மிடம் முன்னவனைப் பார்த்தீர்களா என்றால் அவ்விடத்தில் உண்மைபேசுவதால் எப்பயனும் இல்லை. மாறாக இல்லை என்ற பொய் சொல்வதால் அங்கு ஓர் கொலை தடுக்கப் படுகிறது. ஆகையால்தான் வள்ளுவர்:-

“வாய்மை எனப்படுவ (தி)யாதெனில் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்” என்கிறார்.

உண்மையுடையதாகவும் நன்மையுடையதாகவும் சொல்லும் சொல்லில் இயல்பாக அன்பும் குடிகொண்டிருக்கும். அன்பு கலவாத கனிவில்லாத பேச்சால் நன்மை விளைந்துவிடாது.யாரிடமும் அன்புகலந்து இனிமையாகப் பேசவேண்டும். அன்புகலந்த பேச்சு செவியைக் குளிர்விக்கும். சிந்தையைக் குளிர்விக்கும். ஊன் உடல் உணர்வு உயிர் வரைக் குளிர்விக்கும். ஆகையால்தான்

“இன்சொலால் ஈரம்அளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்” என்கிறார்.

அன்புகலந்த சொல் நிதானமுடைத்தாகவும் அமையும். மெல்ல நிதானமாகப் பேசி கேட்பார்ப் பிணிக்கும் தகையவாய் கேளாரும் வேட்ப மொழிதல் வேண்டும். இதனையே நாவடக்கம் என்கிறார் வள்ளுவர்.

"எல்லாம் உணர்ந்தும் வியாதன் விளம்பியவச்
சொல்லாலே நாவயர்ந்தான் சோமேசா! -வல்லமையால்

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு!"

நிதானத்துடன் கூடிய பேச்சு இனிமை பொருந்தியதாகவும் இருப்பது வழக்கம். பேச்சுக்கு உயிர்நாடி இனிமை. ஆகையால்தான் இனியவை கூறல் என்ற அதிகாரத்தைப் படைத்தார் வள்ளுவர்.

இனிமை பொருந்திய சொல் பணிவுடையதாகவும் ஆகிவிடுகிறது. இதுபோல் சிறந்த ஆபரணம் வேறில்லை என்கிறார் வள்ளுவர்.

“பண்புடையான் இன்சொலன் ஆதல் ஒருவர்க்
கணியல்ல மற்றப் பிற” என்கிறார்.

அன்பும் இனிமையும் கலந்த பேச்சு எப்பொழுதும் ஆழமுடைத்தாதலைக் காணலாம். ஆழமுடையதாக அமையும் பேச்சு சமயமறிந்து பேசும் பேச்சாகவும் விளங்கும். சமயமறிந்து சொல்லாத சொல் சினத்தை மூட்டுவதாகவும் அமைந்து விடும்.

இப்பேச்சிலெல்லாம் முற்றிய நிலை முழுமைபெற்ற நிலை அவையறிந்து பேசுதல். கற்றோர் கூடிய அவையுள் இதைப் பேசல்வேண்டும் இதைப்பேசல் கூடா என்கிற சிந்தனையோடு பெசவேண்டும். இதைத்தான் வள்ளுவர்:-

“அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்து தூய்மை யவர்” என்கிறார்.

அவையறிந்து பேசுதல் மட்டும் போதுமா? என்றால் அதுதான் இல்லை. அவையோர்தம் முகக் குறிப்பறிந்து பேசவேண்டும். குறிப்பறியாமற் பேசுபவனை மரம் என்கிறார் அவ்வை.

"கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் -சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். "

சொல்வல்லார் அவையுள் சொல்லாடுவார் சொல்வல்லாராக இருத்தல் வேண்டும். சொல்லில்லார் அவைநடுவில் சொல்லாடுவதை முந்திரிக் கொட்டை என்கிறார் தா.ம.வெள்ளை வாரணம்.

“எந்தப் பழத்திற்கும் ஏன்வைத்தான் உள்விதையை
முந்திரிக்கு மாத்திரம் முன்வைத்து? -சிந்திக்கின்
நல்லவையுள் கற்றோர்தாம் நாவடக்கி வீற்றிருக்கச்
சொல்லுதலால் பேதைநாச் சோர்ந்து!” என்கிறார்.

எனவே உண்மையாகவும் நன்மையாகவும் அன்பாகவும் நிதானமாகவும் இனிமையாகவும் ஆழமாகவும் சமயமறிந்த பேச்சாகவும் அமைதல் வேண்டும். இல்லையேல் பேசாதிருத்தல் நலம். இதைத்தான் வள்ளுவர்:-

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" என்கிறார்.

இச்சொல்வன்மை அமையப்பெற்றோர்க்கே வினைத்தூய்மை அமையும். ஆகையால்தான் சொல்வன்மை அதிகாரத்தை முதலில் வைத்து வினைத்தூய்மையை அடுத்து வைத்தார் வள்ளுவர்.

மேடைப்பேச்சுக்கு முதலில் தேவையானது மேடை என்ற புரிதலே நல்ல மேடைப்பேச்சாளனுக்கு இன்றியமையாதது. ஆகவே எப்போதும் எந்த மேடைக்கும் ஏறிச்செல்வதற்கான யத்தனிப்புடன் இருப்பவராகவே மேடைப்பேச்சாளர் இருக்கவேண்டும். மேடைக்குமுன்னால் மனிதர்கள் இருக்கவேண்டியதில்லை. ஆகவே குட்டி அரசியல்கட்சிகளின் தெருமுனைக்கூட்டங்கள் தொழிற்சங்க உள்ளறைக் கூட்டங்கள் கரகாட்டம் தொடங்குவதற்கு முன்புள்ள ஒலிப்பெருக்கி ரீ....ங்கிடும் மதச்சொற்பொழிவுகள் எதையும் ஒரு பேச்சாளன் தவிர்த்துவிடக்கூடாது. எந்த கலையும் அக்கலைஞனுடைய ஆத்மநிறைவுக்காகவே நிகழ்த்தப்படுகிறது. மேடைப்பேச்சு ஒரு கலை. கலை கலைக்காகவே.
மேடைப்பேச்சை பயிலத்தொடங்குவதற்கான சில ஆரம்பகட்டங்கள் உண்டு. பிறமேடைப்பேச்சுகளுக்குக் கேள்வியாளர்களாகச் செல்வதும் அம்மேடைப்பேச்சு

முடிந்ததும் எழுந்து உடல்படபடக்க குரல் தழுதழுக்க முகம் வியர்க்க ”இப்ப நான் கேக்கிறது, அதாவது நீங்க பேசினதுலே நான் என்ன கேக்கறேன்னாக்க, ஆக்சுவலி இந்துமாதிரி ஒரு விசயத்திலே நான் கேக்கவாறது...பட்...”என்ற வகையில் வினாக்களைத்தொடுப்பது.

பழகுநருக்காக கீழ்க்கண்ட குறிப்புகள். நவீன இலக்கியவாதி என்றால் ”கலை கலைக்காகவா இல்ல மக்களுக்காகவா?”. முற்போக்கு மேடையில் ”இந்த விஷயத்திலே தொழிலாளியோட நெலைபாடு என்னவா இருக்கணும் தோழர்...” தமிழியக்கக் கூட்டத்தில்”இனமானப்பகைவர்களை வேரறுக்கிறதுக்கு மொழியை கருவியா பயன்படுத்தறதைப்பத்தி என்ன நெனைக்கிறீங்க?” — இம்மாதிரி கேட்கலாம். இவை கடந்த பத்தாண்டுகளாக தொடர்ச்சியாக கேட்கப்பட்டு வருபவையாதலால் அவர்களுக்குப் பதில்சொல்வதிலும் பெரிய சிக்கல் இராது. இதைவிட எளியவழி அவர்கள் பேசியவற்றில் ஒரு சொற்றொடரையே கேள்வியாக மாற்றி அவர்களிடமே கேட்பது. அதற்கு பின்னால் அவர்கள் சொல்லிய வரிகளை பதிலாகச் சொல்வார்கள். இருசாராருக்கும் திருப்தி
நம் குரலை நாமே கேட்க ஆரம்பிக்கும்போது ஏற்படும் பரவசமே மேடைப்பேச்சாளனை உருவாக்கும் அடிப்படை. அதன்பின்பு அடுத்த கட்டத்துக்குச் சென்று ஒரு கேள்வியை இருபது நிமிடங்களுக்கு தயாரித்துக்கொள்ளலாம். அதை எந்த மேடையிலும் எந்த பேச்சாளரும் பேசி முடித்தபின்னர் எழுந்து கேட்கலாம். ‘லூயிபுனுவலும் நிஜின்ஸ்கியும்’ என்ற கூட்டத்திற்குச் சென்று கலையழகனின் கவித்திறனைப்பற்றி கேள்வி கேட்பது தமிழ்நாட்டில் அனுமதிப்பட்டிருக்கின்றது. கேள்வி பத்து நிமிடங்களுக்குமேலே செல்லும்போது ”விஷயத்துக்கு வாங்க” என்ற மன்றாடல் நிமிடத்துக்கொருமுறை ஒலிப்பதை அஞ்சாது புறக்கணித்தல் வேண்டும்.

இந்தக்கட்டத்தில்தான் குஞ்சு கோழியாவது போல பேச்சாளர் ‘கூவி தெளிகிறார்’. அதற்கான பயிற்சிகளில் முதன்மையானது நேரம்காட்டும் குரலைப்புறக்கணிப்பது. நாமே மின்னணுக்கருவி ஒன்றில் மெல்லிய குரலில் ”நேரமாச்சு, முடிச்சிடுங்க” என்று ஐந்து நிமிடங்களுக்கொருமுறை ஒலிப்பதுபோல அமைத்து வைத்துவிட்டு அதனால் சற்றும் பாதிக்கப்படாமலிருக்கும்படியாக நம் பேச்சுமுறையை பயிற்சி செய்துகொள்வது நல்லது.

”சொல்வலான் சோர்விலன் அவனை இருக்க வைத்தல் யார்க்கும் அரிது” என்ற மூதாதைக்கூற்று இருப்பதனால் நாம் ஒருபோதும் பேச்சில் சோர்வுறலாகாது. சோர்வு நம் முன் விதிவலியால் வந்து அமர்ந்திருக்கும் கேள்வியாளர்களுக்கு மட்டுமேயுரியதென்க. ‘எதுவரை போகுமோ அதுவரை

போகலாம்' என்ற கவியரசின் வரியே நமக்கு வழிகாட்டியாம். ஆயினும் பேச்சுக்கு முன்னர் நம் கைக்கடிகாரத்தைக் கழற்றி நிலைமேஜைக்குமேல் வைத்துக்கொள்ளவேண்டும் என்பதை மூத்த பேச்சாளர்கள் செய்வதிலிருந்து கற்றுக்கொள்ளலாம். அவர்கள் நிறுத்தக்கடிகாரத்தை பயன்படுத்துகிறார்கள். பேசி முடித்தபின் வந்தமர்ந்து அவர்கள் அதை ஓடவிடுவதைக் காணலாம்.

நல்ல பேச்சாளன் தன் பேச்சை மூன்றாக பகுத்துக்கொள்ள வேண்டும். முதல்பகுதியில் தான் பேசப்போவதென்ன என்று சொல்ல வேண்டும்.அடுத்த பகுதியில் தன் பேச்சை நிகழ்த்த வேண்டும். கடைசிப்பகுதியில் பேசியதென்ன என்று சொல்ல முற்படவேண்டும். பேச்சை ஒன்றோடு இரண்டு என்ற மரபுமுறைப்படி கரித்தாள் வைத்து பிரதியெடுத்து மூன்றையும் சேர்த்துவைத்து மனப்பாடம்செய்து பேசிப்பழகுதல் நல்லது.

மேடைப்பேச்சாளனுக்குச் சில விதிகள் உள்ளன. ஒருபோதும் அவன் எதையும் சொல்லவோ கேட்கவோ கூடாது. சொல்லிக்கொள்ளவும் கேட்கவும் ஆசைப்பட மட்டுமே வேண்டும். அச்சு ஊடகத்தில் முக்கால்குறிகள் அரைக்குறிகள் கால்குறிகள் உள்ளது போல மேடைப்பேச்சிலும் உண்டு, அவை சொற்கள் வடிவில் உள்ளன. 'ஆகவே நான் சொல்ல வருவதென்னவென்றால்' என்பது முக்கால்முறி. முக்கால்பங்கு பேச்சு மிஞ்சியிருக்கிறதென்றாலும் இது பேச்சு முடியக்கூடுமென்ற நப்பாசையை கேள்வியாளர் மனதில் உருவாக்கி கூட்டம் கலைவதைத் தடுக்கும்.இன்னும்பலர் பேசஇருப்பதனால் நான் விரிவாகச் சொல்லாமல் சுருக்கமாக சொல்லி முடிக்க விரும்புகிறேன்' என்பது அரைப்புள்ளி. ”என்னுடைய கருத்து என்னவென்றால்” போன்ற சொற்றொடர்கள் கால்புள்ளி.

'இன்றையதினம்' 'அதேசமயம்' போன்ற சொற்களுக்கு மேடைப்பேச்சில் பொருள் இல்லை என்றறிக. அவை கணிப்பொறித் தட்டச்சில் இடைவெளிப்பித்தான் போன்றவை.”எல்லா சொல்லும் பொருளுடைத்தற்றே”என்ற தொல்காப்பியச் சூத்திரம் இதையே குறிப்பிடுகிறது. மேடையில் பேசப்படும்போது எல்லா சொற்களும் மெல்லமெல்ல தங்கள் பொருள்களை உடைத்து எறிந்துவிட்டு விடைபெறுகின்றன. அந்நிலையில் எந்தச் சொல்லும் எதையும் குறிக்கும். புரட்சிவெடிக்கும் என்ற சொற்றொடர் சாயங்காலம் வீட்டுக்குச் செல்வோம் என்ற பொருள் தரலாம். கொலைவாளினை எடடா என்ற சொறொடர் தாராளமாக நிதிவழங்குங்கள் என்ற பொருள்பெறலாம்.
பேச்சாளருக்கு மனைவி மிக முக்கியம். அவளை வைத்தே அவர் நகைச்சுவை விருந்து படைக்க முடியும். நடுவர் அல்லது தலைவர் வெண்பல் காட்டி நகைத்து ”இன்னிக்கு வீட்டிலே பூரிக்கட்டைதான்...ஹ¥ம்”என்று தலையாட்டும்போது ”தலைவரவர்களே நாங்கள் அதற்காகவே ஹெல்மெட் வைத்திருக்கிறோம்” என்று

சொல்லி மெல்ல குரல் தாழ்த்தி ”ஹெல்மெட் ஹெல்மெட்” என்று சொன்னால் அரங்கு அதிராதா என்ன? மேடையில் அச்சுத்தமிழ் பேசி நாக்கு களைத்துவிடும்போது கிராமத்தமிழுக்கு மாறி ”எங்கூட்டுக்காரி இருககளே அவ, என்னத்த சொல்றது போங்க...”என்று சற்றே இளைப்பாறலாம்.

மேடைப்பேச்சில் நிலைபாடு எடுப்பது அவசியம். நீங்கள் யார்? புரட்சியா? அப்படியானால் ஒலிப்பெருக்கிக்கு உங்கள் இடத்தோளைக் காட்டி பக்கவாட்டில் திரும்பி நில்லுங்கள். வாத்தை பிடிப்பது போல ஒலிப்பெருக்கியின் கழுத்தைப்பிடியுங்கள். பேச்சு சூடுபிடிக்க பிடிக்க மாறி மாறி இரு தோள்களையும் ஒலிப்பெருக்கிக்குக் காட்டுவது கலையழகூட்டும். நீங்கள் நகைச்சுவைப்பேச்சாளரானால் மைக்கை கிட்டத்தட்ட விழுங்குபவர் போல நெருங்கிவிடுங்கள். உங்கள் முக்கல் முனகல்கள் மேடைக்கு முக்கியம். அறிவுஜீவிப்பேச்சு என்றால் நிலைமேடையில் இரு கைகளையும் மடித்து ஊன்றிக்கொள்ளலாம். இது தொடைநடுக்கத்தைக் குறைப்பதோடு தொப்பை மற்றும் கூனையும் மறைக்கும். நிலைமேடை இல்லாதபோது அறிவுஜீவிப்பேச்சாளர்கள் காற்சட்டைப்பைக்குள் கைகளைப்போட்டுக்கொள்வது நன்று.கைநடுக்கம் மறையும். பக்திப்பேச்சு என்றால் அமர்ந்துகொள்ளலாம். சப்பணமிட்டு அமர்ந்தால் மரபுத்¦தொடர்ச்சி ஏற்படுகிறது. பத்மாசனம் என்றால் நீங்கள் ஞானகுரு.

எந்நிலையிலும் மேடைப்பேச்சு சாதாரண தொண்டையில் அமையலாகாது என்று அறிக. ‘சாம்பார் கொண்டுவா’ என்று சொல்வதுபோல ‘எழுந்திரடா இளஞ்சிங்கம்!’ என்று சொல்ல முடியாதல்லவா? அடித்தொண்டை நன்று. சிம்மக்குரலுக்கு தனி குரல்வளம் தேவை. உறுமல் கர்ஜனை பிளிறல் முழங்குதல் மட்டுமே பேச்சு. பேசுதல் பேச்சல்ல. பெரும்பேச்சாளர்களை அவர்களுக்கே உரித்தான சைகைகள் மற்றும் அடையாளங்கள் மூலமே அறியப்படுகிறார்கள். ஆண்கள் முறுக்கு மீசை, பட்டைமீசை, தோள் துண்டு, வண்ண சால்வைகள் ,சல்வார்- கமீஸ், சுடிதார் போன்றவற்றை நாடலாம். பெண்கள் ஜிப்பா, ஜீன்ஸ் அணிவது சிறப்பு. மீசைகூட வைக்கலாம். சுட்டிக்காட்டுவது வெட்டிக்காட்டுவது ஓட்டிக்காட்டுவது போன்ற கையசைவுகளும் துண்டை இழுத்துவிட்டுக்கொள்ளுதல் சட்டைக்கையை மடித்துக்கொள்ளுதல் காலரை தூக்கிவிட்டுக்கொள்ளுதல் மீசைமுறுக்குதல் போன்றவையும் பேச்சுக்கு வலுக்கூடுபவை. நழுவும் பாண்டை இழுத்து மேலே விடுதல் அவ்வாறல்ல.

‘சுற்றிவளைப்பது’ ‘அடுக்கிச் சொல்லுவது’ போன்றவை நல்ல பேச்சுக்கு அழகு. நல்ல அகராதியை வாங்கி ஒரே போல ஒலிக்கும் சொற்களைக் குறித்துக்கொண்டு அவற்றை நன்றாக மனப்பாடம்செய்து கொண்டால் சொல்

சிறக்கும். அடுத்த வரி அகப்படும் வரை அதே வரியில் மேயாத மானாக நின்றுலாவ முடியும்.'முந்திரிப் பருப்பிருக்கிறது. அதிலே சிறப்பிருக்கிறது. நல்ல கொழுப்பிருக்கிறது. சற்றே இனிப்பிருக்கிறது. தின்னும் விருப்பிக்கிறது' என்று சென்றுகொண்டே இருக்கலாம்.

சொல்ல வந்த கருத்துக்குச் சுற்றும் கும்மியடித்தல் ஒரு கலை. ”இன்றைய தினம் இங்கே நடந்து கொண்டிருப்பது என்ன? நம்மையெல்லாம் வாட்டிக்கொண்டிருப்பது என்ன? தாய்மார்களை கண்ணிர்விடவைப்பது என்ன? அவர்களின் குழந்தைகளை இழுவாச்சியடிக்க வைப்பது என்ன? நாட்டிலுள்ள நல்லோர் அஞ்சி நடுங்குவது என்ன? நாமெல்லாம் இங்கே பேசக்கூடியிருப்பது என்ன?” என்று சொல்லிச்சென்றால் யாதும் ஊரே, எதுவும் உரையே.எதுகை மோனையை நம்பினோர் எதற்கும் அஞ்சார். நாம் விரும்புவது டிவி. அதிலே அழைப்பார் கூவி. பார்த்து அழுவோம் கேவி. அதைத்தடுப்பார் சில பாவி. அவர்கள்ளுக்கு வைக்கவேண்டும் ஆவி — என்று சொல்லிக்கொண்டே செல்லலாம்.

இரட்டுற மொழிதலும் விரும்பபபடும். மேடையில் அறிவு நடமாடுவதற்கான சான்றாகவும் அத்திறன் அமையும்.'நிலக்கடலை பயிரிட்ட வயல். அலையலையாய் கண்டேன் நிலக்கடலை!' என்றொரு எடுப்பெடுத்தால் தலைவர் ”நீங்க தின்னது உப்புக்கடலை”என்று சொல்லி அவையை குதூகலிக்கச் செய்ய ஏதுவாகும். இரட்டுற மொழிதலில் கௌரவமிருப்பது நன்று. கௌரவம் இழக்கத்துணிந்தால் எதுவும் இரண்டுபொருள் கொள்ளும். ”திங்கக்கிழம போயிருந்தேன்' என்று கோணலுதடுகொண்டு சொல்லி ஒரு இழுப்பிழுத்தால் தெருமுனை கேள்வியாளர் இறும்பூது எய்துவர்.

கைதட்டல் இல்லையேல் மேடைப்பேச்சு இல்லையென்றறிக. கைகள் ஒருபோதும் தானாகவே தட்டாதென்றறிந்தவனே மேடைப்பேச்சாளன். எங்கே கைகள் தட்டப்பட வேண்டுமென்பதை பேச்சாளர் பேச்சுமுறைமூலம் ஐயம்திரிபற அவைக்கு அறிவித்தாகவேண்டும். பேச்சு நடுவே சொன்ன வரியை வேறு தொனியில் மீண்டும் சொல்லி இடைவெளி விடுதல். ஒரு சொற்றொடரை உரக்கச் சொல்லி அவையோரை சிம்மபாவனையில் பார்த்தல். கைகளை தூக்கி ஆணித்தரமாக உரைத்தல். சட்டென்று குரலை குறைத்தோ இழுத்தோ ஒன்றை உரைத்தல் என அதற்கான அடையாளங்கள் பல. எங்கே கைதட்ட வேண்டுமென நாம் பார்வையாளருக்கு உணர்த்திவிட்டால் தமிழக மக்கள் தட்டாமல் விடாரென்பதை நம்புக.

கடைசியாக, நல்ல மேடைப்பேச்சு என்பது கேட்டு முடித்தகணம் கேள்வியாளருக்கு ஏராளமாகக் கேட்டுவிட்ட எண்ணத்தை உருவாக்கும்போதே மறுநாள் முழுமையாக அவர் மனதிலிருந்து மறைந்துவிடக்கூடியதாகவும்

இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நாள்தோறும் எப்படி பேச்சாளர் பேசமுடியும்? நல்ல பேச்சும் சங்கீதமும் ஒன்று. இரண்டிலும் ஒரேவரியை ஓராயிரம் முறை நிரவல்செய்யலாம்.
- show quoted text -

“நான் செய்கிற ஒவ்வொரு தப்பையும் என் பயத்தையும் மற்றவர்கள் உற்று கவனித்ததாக கற்பனை செய்துகொண்டேன் . அதனால் நான் என்ன பேசுகிறேன் என்பதில் கவனம் செலுத்த முடியவில்லை . அவர்கள் மனசுக்குள்ளே சிரிப்பதுபோல எனக்குத் தோன்றியது.”–